**மூன்றாம் பருவ மாதிரி தொகுத்தறித் தேர்வு - 2022**

**வகுப்பு : 8** **அறிவியல்**

**மதிப்பெண் : 100** **காலம் : 2.30 மணி**

I. **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** (10 x 1 = 10)

1) வெப்பநிலையின் SI அலகு_______.

(1) செல்சியஸ் (2) ஃபாரன்ஹீட்

(3) கெல்வின் (4) ஆம்பியர்

2) ஒலி அலைகள் எதில் வேகமாகப் பரவுகின்றன?

(1) காற்று (2) உலோகங்கள்

(3) வெற்றிடம் (4) திரவங்கள்

3) கீழ்க்காணும் ஒன்று நிலைத்த காந்தத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

(1) மின் காந்தம் (2 முமெட்டல்

(3) தேனிரும்பு (4) நியோடிமியம்

4) மின்சாரத்தைக் கடத்தும் அலோகம் _______.

(1) கார்பன் (2) ஆக்சிஜன்

(3) அலுமினியம் (4) சல்ஃபர்

5) வெட்டப்பட்ட ஆப்பிள் பழுப்பு நிறமாக மாற காரணமான நிறமி _______.

(1) இரும்பு (II) ஆக்ஸைடு (2) மெலனின்

(3) ஸ்டார்ச் (4) ஓசோன்

6) அசோட் எனப்படுவது எது?

(1) ஆக்சிஜன்

(2) நைட்ரஜன்

(3) சல்ஃபர்

(4) கார்பன் டை ஆக்சைடு

7) உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளின் பண்புகளைப் பெற்றவை _______.

(1) புரோட்டோசோவா (2) வைரஸ்

(3) பூஞ்சை (4) பாக்டீரியா

8) உண்ணத் தகுந்த காளான் _______.

(1) பாலிபோராஸ் (2) அகாரிகஸ்

(3) பெனிசிலியம் (4) அஸ்பெர்ஜில்லஸ்

9) _______ செல்கள் உடலின் எந்த ஒரு பகுதியாகவும் மாறக்கூடிய சிறப்பு செல்களாகும்.

(1) மூல (2) நரம்பு

(3) இதய (4) எலும்பு

10) மண்ணில் விதைகளை இடும் முறையின் பெயர் யாது?

(1) உழுதல் (2) விதைத்தல்

(3) பயிர்ப் பெருக்கம் (4) பயிர்ச் சுழற்சி

II. **கோடிட்ட இடங்களை நிரப்புக** (10 x 1 = 10)

11) மின்னோட்டத்தினை அளவிடப் பயன்படும் கருவி _______.

12) நீரியல் உயர்த்தியில் பயன்படும் விதி _______.

13) ஒலி _______ வடிவத்தில் பயணிக்கிறது.

14) பசுங்காந்தங்கள் என அழைக்கப்படுபவை _______

15) சந்திராயன் - 1 விண்ணில் செலுத்தப்பட்ட நாள் _______

16) வைரம் என்பது _______ ன் ஒரு வடிவம்.

17) குளவியின் கொடுக்கில் உள்ள ஓர் அமிலம் _______

18) _______ முதலாவது உண்மையான நிலத் தாவரம்.

19) பூஞ்சைகள் _______ பிரிவைச் சார்ந்தவை.

20) ஆண்களின் குரல் ஒலிப்பெட்டகம் _______ என்று அழைக்கப்படுகின்றது.

II. **சரியா? தவறா? எனக் கூறுக. தவறான கூற்றைத் திருத்துக**. (5 x 1 = 5)

21) பொருளொன்று திட நிலையில் இருந்து வாயு நிலைக்கு மாறும் நிகழ்ச்சிக்கு குளிர்வித்தல் என்று பெயர்.

22) ராக்கெட்டின் இயக்கு பொருள்கள் திண்ம நிலையில் மட்டுமே காணப்படும்.

23) CFC என்பது ஒரு மாசுபடுத்தியாகும்.

24) பிரையோஃபைட்டுகளில் மாஸ்கள் நன்கு வளர்ச்சி அடைந்த தாவரங்களாகும்.

25) மீன்கள் மூட்டுகளின் உதவியுடன் நீந்துகின்றன.

III. பொருத்துக (5 x 1 = 5)

| | | |
|---|---|---|
| 26) கீல் மூட்டு | - | நிறங்காட்டி |
| 27) குப்பைமேனி | - | கணுக்கால் |
| 28) மஞ்சள் | - | இயற்கை நிறங்காட்டி: |
| 29) உலர் பனிக்கட்டி | - | யூபோர்பியேசி |
| 30) கூலூம்பைட் | - | திட $CO_2$ |

IV. **ஓரிரு வார்தைகளில் விடையளி** (10 x 2 = 20)

31) SI அலகுமுறை என்பதன் விரிவாக்கம் யாது?

32) கோளக ஆடியின் குவிய தொலைவு 7 செ.மீ. அதன் வளைவு ஆரம் என்ன?

33) வெப்பப் பரிமாற்றம் நடைபெறும் விதங்கள் யாவை?

34) அணுவின் அடிப்படை துகள்கள் யாவை?

35) காந்தத்தின் பண்புகள் இரண்டு கூறு.

36) வேதிப்பொருள்களின் அரசன் என அழைக்கப்படுவது எது?

37) பசுமை இல்ல வாயுக்கள் யாவை?

38) பருவமடைதல் எந்த வயதில் நிகழும்?

39) நீரின் கொதிநிலை யாது?

40) கேட்கக்கூடிய ஒலியின் அதிர்வெண் யாது?

V. **குறுகிய விடையளி**

**(எவையேனும் 10 மட்டும்)** (10 x 2 = 20)

41) $\frac{\pi}{4}$ என்பதை டிகிரியாக மாற்றுக.

42) ஒப்புமை தருக.

(i) வெப்பநிலை : _______ :: மின்னோட்டம் : ஆம்பியர்

(ii) குழி ஆடி : தொலைநோக்கி :: _______ : வாகனங்களின் பின்புறம்

43) வெப்பச் சலனம் - வரையறு

44) சரியான விடையைத் தேர்ந்தெடு.

கம்பிக் கருவிகளுக்கு ஓர் உதாதரணம்

(1) வயலின் (2) எக்காளம்

(3) சிதார் (4) 1 மற்றும் 3

45) சரியான விடையைத் தேர்ந்தெடு.

இயற்கைக் காந்தத்திற்கு ஓர் உதாதரணம்

(1) மேக்னடைட் (2) பைரோடைட்

(3) ∴பெர்ரைட் (4) மின் காந்தம்

46) ஒலி அலைகளின் வகைகள் யாவை?

47) நீரின் நிரந்தர கடினத்தன்மைக்கு காரணம் யாது?

48) ராக்கெட்டின் பகுதிகள் யாவை?

49) நீரினை மின்னாற் பகுக்கும்போது வெளிவரும் வாயுக்கள் யாவை?

50) ஒப்புமை தருக.

(i) அயோடின் : தைராய்டு :: _______ : இரத்த சோகை

(ii) சயாடு : தர்பூசணி :: காரிப் : _______

51) சரியான விடையைத் தேர்ந்தெடு.

பந்து கிண்ண மூட்டுக்கு ஓர் உதாதரணம்

(1) தோள்பட்டை (2) முழங்கால்

(3) மணிக்கட்டு (4) முள்ளெலும்பு

52) குறியீடு எழுதுக.

(அ) சோடியம்

(ஆ) தாமிரம்

(இ) யுரேனியம்

(ஈ) இரும்பு

53) பருவமடைதலின்போது ஏற்படும் மாற்றங்கள் யாவை?

54) உழுதல் - வரையறு?

55) சங்கிலித் தொடராக்கம் என்றால் என்ன?

VI. **விரிவாக விடையளி**

**(எவையேனும் 6 மட்டும்)** (6 x 5 = 30)

56) அடிப்படை அளவுகள், அலகுகள் மற்றும் அவற்றின் குறியீடுகளை எழுதுக.?

57) காந்தத்தின் பயன்கள் யாவை?

58) வேளாண் செயல்முறைகளை விவரி?

59) காடு அழிப்பு என்றால் என்ன? அதற்கான காரணங்கள் மற்றும் விளைவுகளை விவரி.

60) மனித கண்ணின் படம் வரைந்து பாகங்களைக் குறி?

61) பாக்டீரியாவின் படம் வரைந்து விளக்குக.?

62) காரங்களின் பயன்கள் யாவை?

63) அலை இயக்கத்தின் பண்புகளை விவரி?

64) உனக்குத் தெரிந்த 10 தனிமங்களின் பெயர்களை எழுதி அவற்றின் குறியீடுகளை எழுதுக.?

65) குவி ஆடியின் பயன்கள் யாவை.?